RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1964

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பெரியார் பார்வையில் பெண்ணியம்

**ஜெ. சூர்யா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Feminism in Periyar's View

**J. Surya** [a, *]

[a] Research Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women, (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tamil Nadu, India

* Corresponding Author: suryasajee17@gmail.com

Received: 12-09-2022
Revised: 28-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Periyar, an Unparalleled Humanist in the Twentieth Century. Earlier his life and philanthropic spirit got trapped in the darkness of intense ignorance and later it brought light to the society to dispel the ignorance of the people. He condemned God, religion, caste, ritual and formality and he root out superstitions. Although many leaders in India emerged to save women from the sufferings, periyar's ideals were great. Ever since the dawn of human society, men have dominated women in one way or another. Chastity, morals, education, property rights, employment, choosing a life partner etc. in all these things women should have equal rights to men. This article explains that men and women must be treated equally and both should not be superior or inferior. Also, Periyar was a rational thinker all these things in 20 years which would have been taken twenty centuries.

**Keywords:** Male, Female, Society, Freedom of Speech

## முன்னுரை

ஆரம்ப காலகட்டத்தில் இருந்தே பெண்ணடிமை என்பது உலகம் தழுவிய ஒரு சிக்கல் என்றாலும், இந்தியாவில் பெண்ணடிமைத்தனம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது. எனவே, உலகெங்கும் சுதந்திரம், சமத்துவம், சமதர்மம் என்ற எண்ணம் பரவிய காலத்தில் நம் நாட்டிலிருந்த சமூக சீர்திருத்தவாதிகளும் சிந்தனையாளர்களும் அது பற்றிச் சிந்தித்தலில் வியப்பில்லை. ஆனால், இவர்களில் ஒருவர் கூட பெண்கள் உள்படப் பெண்ணியச் சிந்தனைகளில் பெரியாருக்கு நிகராக இல்லை என்பதில் ஐயமில்லை. பெண்களின் நலனுக்காக மட்டுமின்றி எழுச்சிக்காக உழைத்தவர்களில் காந்தியடிகள், ஈ.வெ. ரா, பாரதியார், பாரதிதாசன் முக்கியமானவர்கள் அவர்களின் தொண்டு போற்றத்தக்கது. எனவே, ஆணிணத்தோடு போட்டி போட்டு பெண்ணினத்திலே ஞானியார்களான மகாகவிகள் தோன்றுதல் அரிதாக இருந்து வந்திருக்கின்றன என்பதை உணரவைக்கும் விதமாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

## இலக்கணத்தில் பெண்

பெண்களுக்கான இலக்கணத்தைத் தொல்காப்பியர் அவர்கள் எவ்வாறு கூறுகின்றார் என்பதனை,

“அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப”

என்ற வரிகளால் பெண்களுக்கான இலக்கணத்தைத் தொல்காப்பியர் கூறுவதைப் பெரியார் அவர்கள் கடுமையாக மறுக்கிறார் (Ilampuranar, 1966). மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு, கற்பு என்பவை ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டுமே தவிர பெண்களுக்கு மட்டும் உரியது அல்ல என்பதைப் பெரியார் உணர்த்துகிறார்.

இதனையே,

“அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்

அழகிய தமிழ்நாட்டின் கண்கள்”

என்று பாரதிதாசனும் தம்முடைய பாடல் வரிகளால் உணர்த்துகிறார் (Bharathidasan, 2016).

மேலும்,

“எனது சுவைப்பினும்

நீ கை தொட்டது

வானோர் அமுதம்

புரையுமால் எமக்கென”

இல்லற வாழ்க்கையில் முதன் முதலாகத் தலைவி சமைத்த உணவை வானவர் அமிழ்தம் என கணவன் நுகர்ந்து மகிழ்ந்தான் என்ற செய்தியைத் தொல்காப்பியரின் வழி அறியமுடிகின்றது (Ilampuranar, 1966).

## ஆணுக்கு நிகர் பெண்

ஆணைப்போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுமைத்திறன் உண்டென்பதை ஆண்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித சமுதாய வளர்ச்சிக்கு ஆண் பெண் என்ற இருவரின் குணங்களும் சமமாய் இருக்கவேண்டும். சமத்துவத்திற்கு மதிப்பு கொடுப்போமானால் பிள்ளையைச் சுமந்து பெற்றெடுக்கும் வேலை ஒன்றினைத் தவிர மற்ற காரியங்கள் அனைத்திலும் ஆண், பெண் இருவருமே ஒன்று போல வாழ வேண்டும் என்ற உறுதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பெரியார் அவர்கள் எடுத்துரைக்கிறார்.

பெண் ஆணுக்குத் துணையென்றும், ஆண் பெண்ணுக்குத் துணையென்றும், பெண்ணால் ஒரு மனிதன் முழுமையடைகிறான் என்றும் பாரதி தனது சுயமான சிந்தனையின் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார். பாரதி வீரத்திலும் தீரத்திலும் திறமையிலும் ஆணுக்குப் பெண் சளைத்தவர் இல்லையென்ற நிலை வர வேண்டுமென்று ஆசைப்பட்டதை,

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யாrhக்கும் அஞ்சாத நெறிகளும்

திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவளாகப்

பெண் இருக்கவேண்டும்”

என்ற மதிப்பு கொடுத்ததோடு மட்டுமில்லாமல் பெண்களால் தான் மறுமலர்ச்சியான பாரதத்தை உருவாக்க முடியும் என்ற புரட்சியைச் செய்தவர் (Bharathiyar, 2001).

பெண்கள் ஆண்களுக்கு நிகரென்றும், பெண் சமுதாயம் உயர்ந்த நிலையை அடைந்தால் தான் நாடு உயர்வடையும் என்பதையும் தெளிவாக உயர்த்தி, உயர்ந்த எண்ணத்துடன் வாழ்வதற்கு உரத்த குரல் கொடுத்தவர் பாரதியார். சமுதாயத்தில் மகளிருக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் வெளிப்படையாகவும் மறைமுகமாவும் விதிக்கப்பட்டுள்ளன.

பெண்கள் தங்கள் வாழ்வில் மற்றவர்களைச் சார்ந்து வாழவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் திருமணத்திற்கு முன் பெற்றோர்களையும், திருமணத்திற்குப் பின்னர் கணவனையும், கணவன் இறந்த பிறகு மகனையும் சார்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆண்கள் என்பவர்கள் பெண்களை அடக்கி ஆளப்பட வேண்டியவர்கள் என்றும் தலைமுறை தலைமுறையாக நம்பி வந்திருப்பதே பெண் அடிமைத்தனத்தை ஊக்குவிப்பதாக பெரியார் அவர்கள் கருதிவருவதனை அறியமுடிகின்றது.

பிறவியில் உயர்வு, தாழ்வு அழிய வேண்டுமானால் கடவுள், மதம் போன்றவற்றை ஒழிக்கவேண்டும். அதுபோலவே பெண்ணடிமைத் தனத்தைப் போக்க வேண்டுமெனில் மதத்தையும் கடவுளையும் ஒழித்தாக வேண்டுமென்று தெளிவாக விளக்கியுரைத்துள்ளார்.

## பெண்கல்வி

கல்வி நாட்டிற்கும் வீட்டிற்கும் இன்றியமையாத ஒன்று. பெண்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் தோன்றுவதற்கு இது உதவுகிறது. ஒரு குடும்பத்தில் பெண் கல்வி கற்றால் அந்தக் குடும்பமே உயரும். அத்தகைய கல்வி கற்கும் உரிமை தொன்றுதொட்டே பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. பெண்களின் வாழ்க்கை உயர்வதற்கு தேவைப்படுவது கல்விதான் என்பதை மறுக்க இயலாது.

மேலை நாட்டுப் பெண்களைப் போல் சகல உரிமைகள் பற்றிய அறிவைப் பெறுவதற்காவது பெண்களுக்கு கல்வி அறிவு அவசியம் என்பதனை,

“நகைகளிலோ சேலைகளிலோ உங்களுக்குள்ள

பிரியத்தை ஒழித்துவிடுங்கள்”

என்று பெண்களின் ஆசைகளைப் பற்றி பெரியார் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார் (Periyar, 1948).

மேலும்,

“சம்பார்த்தனை, குடும்பப் பொறுப்பு, குழந்தைகள்

பெற்றால் அதைக் காப்பாற்றும் திறமை ஆகியவை

ஒரு பெண்ணுக்கு அவள் பெற்றக் கல்வியால்

மட்டுமே ஏற்படும் என்கிறார் பெரியார்”

குடியரசு என்ற இதழில் பெரியார் அவர்கள் பெண் கல்வி கற்றால்தான் எதிர்காலத்தில் இவள் இன்னாருடைய மனைவி என்று அழைக்கமால், இவன் இன்னாருடைய கணவன் என்று அழைக்கப்பட வேண்டும் என்று உயர்ந்த நிலையில் பெண்களைக் காண விரும்புகிறார் (Periyar, 1936).

ஒரு குடும்பத்தில் நான்கு ஆண்களும், ஒரு பெண்ணும் இருந்தால் முதலில் அந்தப் பெண்ணைத்தான் படிக்கவைக்க வேண்டும் என்று பெருமிதத்துடன் கூறினார். நமது குழந்தைகளின் ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் கூட பெண்களால் தான் அக்குழந்தைகளை அன்புடனும், அரவணைப்புடனும் இருக்க முடியும். மேலும், அக்குழந்தைகளை ஆறு, ஏழு வயது வரையிலும் தாய்மார்கள் தான் பார்த்துக் கொள்ள முடியும். அதனால் தான் பெண்கள் ஆரம்பப்பள்ளிகளில் ஆசிரியர்களாக உள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

“பெண்கள் நம் நாட்டில் பிள்ளைப்

பெறும் இயந்திரங்களாக பார்க்கப்படுகிறார்கள்

அறிவுள்ள பெண்களிடமிருந்து தான் அறிவுள்ள

செம்மல்கள் தோன்றக் கூடும்”

என்று பெரியார் அவர்கள் குடியரசு என்ற இதழில் குழந்தையின் முதல் ஆசிரியராக இருக்கும் பெண்ணுக்கு கல்வி அவசியம் என்பதை உணர்த்துகிறார் (Periyar, 1936). மேலும், பெண்களுக்கு கல்வியானது கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்றும், மேலும் தங்கள் ஆண்பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்காது, அவர்களது கல்வியை வளர்க்கவும், ஊக்குவிக்கவும் வேண்டும். ஆண்களை விட பெண்கல்வியில் பெற்றோர் கவனம் செலத்த வேண்டும். என்று பெரியார் அவர்கள் தன்னுடைய எண்ணத்தை ஓங்கிய சிந்தனையாக பதிவு செய்துள்ளார்.

## பெண்ணின் பேச்சுரிமை

பெண்களின் பேச்சுரிமை முக்கியத்துவம் வாய்ந்தது. பெண் பேச்சுரிமை முடக்கப்பட்டிருந்த காலத்தில் சமுதாயத்தில் தோன்றியவர் தான் பெரியார்.

"பெண்டிர்க்கு அழகு பேசாதிருத்தல்"

என்ற வெற்றிவேற்கையின் பாடல் வரிகளுக்கேற்ப எழுத்தைவிட பேச்சுக்கு அதிக வலிமை உண்டு (Aadhiveerapandian, 1962). கல்வியறிவு அற்றவர்கள் கூட பெரியாரின் பேச்சைக் கேட்கும் போது பொங்கி எழுகின்றார். பொங்கி எழும் ஒரு சில குரல்கள் கூடப்பலம் படைத்தவர்களால் பலவீனப்படுகின்றன என்பதை,

"தேசியத் தேரின்

அசோகச் சக்கரத்தின்

அடியில் மாண்டு கிடந்தன

மனுசெய்த பசுக்கள்"

என்ற வைரமுத்து அவர்களின் கவிதை வரிகளால் அறியமுடிகின்றது (Vairamuthu, 1999). பெண்ணுரிமை என்பது மேடைப்பேச்சுகளில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் அது காணப்படுவதில்லை. பெண்கள் படித்து பதவி வகித்தாலும் வீட்டில் அவள் நிலைமாறவில்லை என்றும், பெண்ணை அடிமைப்படுத்தினால் சமூகமானது அழிவு பாதையை நோக்கிச் செல்லும் என்பதை நாம் நினைக்கமால் இருப்பதால் தான் மனித சமூகம் பகுத்தறிவு இருந்தும் நாள்தோறும் தேய்ந்துக் கொண்டே வருகிறது என்கிறார் பெரியார்.

## பெண்ணின் திருமணம்

திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பத்தை நுகரவும், ஒருவரை ஒருவர் காதலித்து, ஒருவருக்கொருவர் வாழ்க்கையில் ஏற்படும் சிரமத்திற்கு ஆறுதலாகவும் அமையும் என்பதைப் பெரும்பாலோர் சிந்திப்பதே இல்லை.

"கல்யாணம் என்றால் சுதந்திர வாழ்க்கை

சமத்துவ வாழ்க்கை என்று இருக்க வேண்டும்

அடிமை வாழ்க்கை மேல் கீழ் வாழ்க்கை என்று

இருக்கக்கூடாது என்பதே எங்களது ஆசை என்கிறார்"

மேலும், திருமணம் செய்வதற்கு முன்பு பொருத்தம் பார்க்கின்றார் (Periyar, 1936). ஆணுக்கும், பெண்ணுக்கும் சமதோற்றம், சமஅன்பு, ஒத்தஅறிவு, கல்வி ஒற்றுமை இருக்குமா என்பதை பார்ப்பதே இல்லை. இந்த பெண்ணானவள் கணவனுக்கு தலைவணங்கி இருக்கவேண்டும். மாடுகளை விலைக்கு வாங்குவதற்கு பொருத்தம் பார்ப்பது போல பெண்களுடைய வாழ்க்கையில் பார்க்கின்றதனை,

"ஒழுக்கமான குணமுள்ள ஒருவனைப் பார்த்துப் பெண்தான்

தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று பெண்ணிற்கான சுதந்திரத்தைப் பெரியார் அவர்கள் தன்னுடையச் சிந்தனைகள் என்ற தொகுதியில் எடுத்துரைக்கின்றார் (Aannaimuthu, 1974). கணவன் மனைவிக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உரிமையளிக்கப்பட வேண்டும். ஆண்களைப் போல் பெண்களையும் வெளியில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஆவேச முழக்கமிட்டார் பெரியார் அவர்கள்.

மேலும், இதனைப் பாரதியார்,

"மாதரெல்லாம் தம்முடைய விருப்பின் வண்ணம்

மனிதருடன் வாழ்ந்திடலாமென்பார் அன்னோர்"

என்று தன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மணமக்களுக்கேயன்றி பிறர்க்கு இல்லை என்று பெருமையோடு எடுத்துரைக்கிறார் (Bharathiyar, 2001). மேலும், பெண் பார்க்கும் படலத்தில் பெண்கள்படும் அவலங்கள் பற்பல. பெண் நொண்டியல்ல என்பதற்காக நடந்து காட்ட வேண்டும். ஊமையல்ல என்பதற்காக பாடிக் காட்ட வேண்டும். பெண் பார்க்க வருபவர்களுக்கு உணவு பரிமாற வேண்டும். காலில் விழுந்து வணங்க வேண்டும் என்பன போன்ற எழுதப்படாத சட்டங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. இதனால் பல நேரங்களில் அவர்களின் உரிமைகள் பறிபோய் விடுகின்ற நிலையை நம்மால் அறியமுடிகின்றது.

## முடிவுரை

பெண்களுக்கு ஆண்களைப் போல் வன்மை, கோபம் ஆளும் திறமையானது இருக்க வேண்டும் என்றும், திருமணத்திற்குப் பின்தான் மகளிரின் வாழ்க்கையில் பல சிக்கல்கள் தோன்றுகின்றது என்கிறார். மேலும் பெண்களுக்கு கல்வி தொழில் ஆகிய இரண்டும் கற்பிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு பொதுக்கல்வியும் தொழிற்கல்வியும் கற்றுத்தர வேண்டும் என்று கூறி, ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமைகள் பொதுவாக இருக்க வேண்டுமென்ற ஆவேச முழக்கமிட்டவர் பெரியார் அவர்கள்.

## References

Aadhiveerapandian, (1962) Vetriverikai, Arjipathi Company, Chennai, India.

Aannaimuthu, V. (1974) Periyar E.V.R. Sinthanaikal, Kazhaga Veeliyedu, Chennai, India.

Bharathidasan, (2019) Bharathidasan Kavidhaigalil Penniyamum Periyarum, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2001) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Ilampuranar, (1966) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Periyar, (1936) Kudiaarasu, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Periyar, (1948) Viduthalai, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Vairamuthu, (1999) Melukuvarththi, Surya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License